<u>ஆரணி நகராட்சி</u>
<u>சாதாரணக் கூட்டம்</u>

2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27.01.2021-ந்தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர்

**<u>பொருள் எண்.1</u>**

ஆரணி நகராட்சியில் வரும் காலங்கள் வடகிழக்கு பருவமழை தொடங்க இருப்பதால் மண்டல நகராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்தில் அனைத்து நகராட்சிகளின் ஆணையாளர்களின் ஆய்வு கூட்டத்தில் பருவமழை காலங்களில் பொதுமக்களுக்கு நோய் பரவாமல் தடுக்கவும், நகரில் காற்று பலமாக வீசும் போது மரக்கிளைகள் உடையும்போத அப்புறபடுத்த Pavar Shaw, Torch Light,சவுக்கு கம்பம்,மற்றும் மழைநீர் தடுக்க மணல் மூட்டைகள்(Sand Bags) முதலியவைகளை தனியாரிடம் வாங்கி நகராட்சி இருப்பில் வைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சம் செலவுகளை இயற்கை பேரிடர் மேலாண்மை திட்டத்தில் செலவு செய்ய நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.2</u>**

ஆரணி நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சி அலுவலகம் அருகில் தரைமட்ட நீர் தேக்க தொட்டி மூலம் மேல் நீர் தேக்க தொட்டிக்கு ஏற்றப்படும் 20 Hp Open well wet type மோட்டார் Shaft பழுது ஏற்பட்டிருப்பதால் பொது மக்களுக்கு மூலம் குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலையில் உள்ளது.எனவே மின்மோட்டார் பழுது மற்றும் காயில் சரி செய்ய தோராய செலவினம் ரூ.30,000.00/-ற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.3</u>**

ஆரணி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் தினமும் வழங்க கீழ்கண்ட மின்மோட்டார்கள் மற்றும் காயில் ரீவைண்டிங்(Coil Rewinding) மேற்படி பணியை Summer Management Water Supply-ல் ரூ.10.00இலட்சத்திற்கு வேலை செய்ய, நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1.150 HP (முப்பதுவெட்டி ஆற்காடு) - Coil & Pump Repair
2.5 HP Submersible (தச்சூர்) 12 Nos - Pump Repair
3.20 HP Vertical Motor - 1 No
4. 20 HP Submersible Motor (கமண்டல நகாநதி) - 1 No
5. UG Cable 4sqmm - 2500mt
6. 7.5 HP Starter Oil - 7 Nos

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.4</u>**

ஆரணி நகராட்சியில் தெரு விளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான 100 எண்கள் கொண்ட 40W குழல் விளக்கு copper Cable வாங்கும் பணிகளுக்கு தேவையான மதிப்பீட்டுத் தொகை ரூ. ரூ.30,000.00/-ற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.5</u>**

ஆரணி நகராட்சியில் பொங்கல் பண்டிகையொட்டி 13.01.2021 முதல் 17.01.2021 ஆகிய 5 நாட்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் காந்தி ரோடு பகுதியில் கூடுதலாக 6 எண்கள் கொண்ட 200W LED மின்விளக்குகள்,ராசி சவுண்ட் சர்வீஸ்,ஆரணிஅவர்கள் மூலம் மேற்கொண்ட பணிக்கான செலவின தொகை ரூ.6000/-யை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.6</u>**

ஆரணி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பரவுதலை தடுக்கும் பொருட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 5.4 செலவில் தினத்தந்தி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ 24780/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமவழங்கலாம்.(கோப்பு எண்: 1710/2020/ எச்1)

**<u>பொருள் எண்.7</u>**

ஆரணி நகராட்சி எல்லைக்குள் பசுமாடுகள் , காலை மாடுகள் ஆகியவற்றை மாட்டின் உரிமையாளர்கள் மாட்டு தொழுவம் அமைத்து பராமரிக்கப்பட வேண்டும் . அவ்வாறு பராமரிக்கபடாமல் தெருக்கள்,சாலைகள் ,நெடுசாலைதுரைக்கு சொந்தமான சாலைகளில் அலைந்து திரிவதால் பொதுமக்களுக்கு இடையுறாக உள்ளத்தால் ,1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 245,246,247 மற்றும் 313(1),313(2) ஆகிய பிரிவுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் ,மாடு உர்மையாளர்களுக்கு ஒரு மாட்டிற்கு ரூ 2000/- வீதம் அபராதம் விதிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 1.மன்றம் அனுமதிக்கலாம்.2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் ஒப்புதல் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று.தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்(ந.க.எண்.1298 /2019/எச்1)

**<u>பொருள் எண்.8</u>**

ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் லாரி மற்றும் ACE ஆட்டோ ஆகியவற்றிற்கு 31.01.2021 தேதியோடு இன்சூரன்ஸ் முடிவவடைகிறது மேலும் ஒரு ஆண்டிற்கு யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு தொகை செலுத்த விவரம் பின்வருமாறு மேலும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| TN-25 V -9463 | - | 19153 |
| TN-25 AZ -1101 | - | 31557 |
| TN-25 V - 4635 | - | 20070 |
| TN-25 V - 4633 | - | 20070 |
| | | 90850 |

அலுவலக குறிப்பு:-1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண்:634/2016/எச்1)

**பொருள் எண்.8**

ஆரணி நகராட்சி பகுதியில் 33 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு மற்றும் முககவசம் அனிதலின் அவசியம் மேலும் டெங்கு கொசுக்களினால் ஏற்படும் தீமைகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட விழிப்புணர்வு போன்றவற்றை சுபநிகழ்ச்சிகள் முலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சிவசக்தி கிராமியகுழு விருத்தாசலம். இரண்டு நாட்கள் கலை நிகழ்ச்சி நடத்த ,நாள் ஒன்றுக்கு ரூ 15000 /- வீதம் இரண்டு நாட்களுக்கு ரூ 30000 /- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-1.மன்றம் அனுமதிக்கலாம்.2. தனி அலுவலர் அனுமதி பெற்று சிவசக்தி கிராமியகுழுவிற்கு தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண்: 28/2020/ எச்1)

.

**பொருள் எண்.9**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை28 அவர்களின் சுற்றறிகை ந.க.எண்.19775/72/2019-3 நாள்: 15.12.2020 தெரிவிதுள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முடி திருத்தகம்/ அழகுநிலையம்/ ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் ஆரணி நகராட்சியில் தொழில்உரிமம் பெற்றுக்கொள்ள தினத்தந்தி நாளிதழில் 9.1.2021ல் விளம்பரம் செய்வதற்கு விளம்பரகட்டணம் ரூ4166 /- செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கபடுகிறது .

அலுவலக குறிப்பு:-1.மன்றம் அனுமதிக்கலாம்.2. தனி அலுவலர் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.( கோப்பு எண்: 35/2021/ எச்2)

**பொருள் எண்.10**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலை அவர்களின் செ.மு.எண் 3343/2017/அ7 நாள் 20.06.2018ல் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017 - 2018ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| SL No. | Name of the Work | Estimate Amount (Rs.in Lakhs) | Implementing Agency |
|---|---|---|---|
| 1 | Construction of Modernized GYM Building in Arani Municipality | 50.00 | Commissioner, Arani Municipality |

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 939/இ1/2017)

## ஆரணி நகராட்சி
## சாதாரணக் கூட்டம்

2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27.01.2021-ந்தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர்

| வ.எண். | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 197 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 2 | 2 | 198 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 3 | 3 | 199 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 4 | 4 | 200 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 5 | 5 | 201 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 6 | 6 | 202 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 7 | 7 | 203 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 8 | 8 | 204 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 9 | 9 | 205 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 10 | 10 | 206 | அனுமதி வழங்கப்படுகிறது. |

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.